விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 20 | ராபி ஆகி 22 | இதழ் 328
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 4-1-1986

## சுதுமலையில் நேற்று வட்டமிட்ட ஹெலிகொப்டர்!

(யாழ்ப்பாணம்)
சுதுமலைப்பகுதியில் நேற்றுக் காலை பத்து மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று உயரமாகவும் தாழ்வாகவும் பல தடவை வட்டமிட்டுப்பறந்த வண்ணமிருந்தது.

இப்பகுதியில் கடந்த டிசம்பர் 21ம் திகதி காலை இடம்பெற்ற சம்பவம் போன்று மீண்டும் நிகழப் போகிறதோ என்ற பீதி மக்களிடையே ஏற்படத்தொடங்கியது, அரை

(5-ம் பக்கம் பார்க்க)

## திருமலை கோபாலபுரத்தில் 31 பேர் சுட்டுக்கொலை

(சென்னை)
திருகோணமலை மாவட்டத்திலுள்ள கோபாலபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நான்கு பெண்கள் உட்பட 31 அப்பாவித்தமிழர்கள் கண்மூடித்தனமாக ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக, 'தமிழீழவிடுதலைப் புலிகள்' சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்

(5-ம் பக்கம் பார்க்க)

## (அரசு தவிர்ந்த) பொது வைபவங்களில் கலந்துகொள்ள

# வெளிநாட்டுத் தூதுவர்கள் முன் அனுமதி பெறவேண்டும்!

(கொழும்பு)
இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், அரச வைபவங்கள் தவிர்ந்த ஏனைய வைபவங்களில் கலந்துகொள்வதற்கு 'கட்டுப்பாடு' விதிக்கப்பட்டுள்ளது.

அரசவைபவங்கள் தவிர்ந்த தனியார் மற்றும் பொதுவைபவம் எதிலும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்துகொள்வதானால், முன்கூட்டியே வெளிநாட்டு அமைச்சிடமிருந்து இனிமேல் அனுமதி பெறவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டமைச்சில் நேற்றுக்காலை நடைபெற்ற கூட்டமொன்றில், பிரதிவெளிநாட்டமைச்சர் திரு. ரெரேன் பெர்ணுண்டோ, அரசாங்கத்தின் புதிய பணிப்புரை பற்றி விளக்கினர்.

இக்கூட்டத்துக்கு, இலங்கையிலுள்ள வெளிநாட்டுத்தூதுவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

## வெலிக்கடையில் 217 தமிழ்க் கைதிகள்:

### 114 பேர் மீது வழக்கு தாக்கலானது

(கொழும்பு)
பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் வெலிக்கடைச் சிறையில் 217 தமிழ்க்கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 114பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-மா)

## தண்ணீரூற்றில் பண்ணை முற்றுகை: இளைஞர் பலி; மூவர் கைது

(முல்லைத்தீவு)
தண்ணீரூற்று - முறிப்பு என்னும் இடத்தில் அமைந்துள்ள நிலக்கடலைப் பண்ணையை ஆயுதப்படையினர் சுற்றிவளைத்துதுப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு இளைஞர் பலியானுர். மூன்றுபேர் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை நான்கு மணியளவில் நிலக்கடலைப் பண்ணையைச் சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தார்களாம். இச் சமபவத்தின்போதே 'ஈசன்' என்று அழைக்கப்படும் இளைஞர் பலியானுர்.

ஒரு வயோதிபர் உட்பட இரு இளைஞர்களை விசாரணைக்காக கூட்டிச்சென்ற ஆயுதப் படையினர், பண்ணையிலிருந்த இரு சக்கர உழவு இயந்திரம், கலப்பைகள் பெட்டிகள் அனைத்தையும் கொண்டுசென்றனராம்.

## தபால் நிலைய ஒய்வூதியம்

[யாழ்ப்பாணம்]
தபால் நிலையங்கள் மூலம் ஒய்வூதியம் பெறுவோருக்கு பின்வரும் திகதிகளில் இம்மாதம் துரையப்பா விளையாட்டரங்கில் ஒய்வூதியம் வழங்கப் படுகின்றது

இம்மாதம் 13ம்திகதி யாழ்ப்பணம், நெடுந்தீவு, அனலைதீவு, நயினுதீவு, கொடிகாமம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒய்வூதியம்.

15ம் திகதி- அச்சுவேலி, அளவெட்டி, காரைநகர், வேலணை, சங்கானை.

16ம் திகதி-சுன்னுகம், உரும்பிராய். கோப்பாய், வண்ணார்பண்ணை.

17ம் திகதி- கரவெட்டி, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை.

20 ம் திகதி- பருத்தித்துறை, மானிப்பாய், வசாவிளான், சுழிபுரம்.

21-ம் திகதி, சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, கொக்குவில். கைதடி.

22ம் திகதி- யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, பண்டதரிப்பு, புங்குடுதீவு.

## மூளைக் காய்ச்சல் அபாயம்: 13 சிறுவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

(கா யோகநாதன்)
யாழ். ஆஸ்பத்திரியில் மூளைக்காய்ச்சலினுல் பாதிக்கப்பட்ட 13 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் மரணமானுர். மூன்று பேர் சிகிச்சைக்குப்பின் வீடு சென்றுள்ளனர்.

22-ம் வார்ட்டில் மூளைக் காய்ச்சல் என்று ஐந்து சிறுவர்கள்அனுமதிக்கப்பட்டனர். புளியங்குளம், இலந்தைமோட்டையிலிருந்துவந்த இரு சிறுவர்கள் சிகிச்சைக்குப்பின் சுகமாகி சென்றுவிட்டனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' டில்லி விரைகிறுர்!

(புதுடில்லி)
தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு புதுடில்லி வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் புதுடில்லி விரைந்துள்ளார்.

மேற்கு ஜெர்மனியிலிருக்கும் திரு. அமிர்தலிங்கம் சென்னை திரும்புவதாக முன்னர் ஏற்பாடு இருந்த போதிலும் அவர் இப்பொழுது தமது விஜயத்தை புதுடில்லிக்கு மாற்றியுள்ளார். (ச)

## அரிசிக்கப்பல் இன்று வருகிறது

(சுண்டுக்குளி)
காங்கேசன்துறைக்கு 2000 தொன்களுடன் இரு அரிசி கப்பல்கள் வரவிருப்பதாகவும் ஒரு கப்பல் இன்று வந்துசேரும் என்றும் யாழ் உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ்.பற்குணம் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வரும் இந்த அரிசி கப்பல் ஒவ்வொன்றிலும் 1000 தொன் அரிசி வந்துசேரும் என்றும் தெரிவித்தார்.

'மதுரட்ட' பெந்தோட்ட' என்ற பெயருள்ள கப்பல்களிலேயே அரிசி வந்து சேரவிருக்கிறது. (க

## வேதாரணியம் சம்பவம்: 49 பேர் கைது

[சென்னை]
வேதாரணியத்தில் பொது மக்களுக்கும் தமிழீழ விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமக்கு எதுவித சம்பந்தமுமில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## முகாம் அருகில் பாலம் குண்டுவைத்து சேதம்

[முல்லைத்தீவு]
முல்லைத்தீவு இராணுவமுகாமிலிருந்து சுமார் ஐநூறு யார் தொலைவிலுள்ள பாலமொன்று அண்மையில் இனந்தெரியாத நபர்களினுல் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்த போதிலும், பாலத்துக்கு பாரியசேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடியைத் தொடர்ந்து கட்டிடங்கள் சேதம்

(முல்லைத்தீவு)
தரையில் புதைத்துவைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சில கட்டடங்கள் சேதத்துக்குள்ளாகின

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் முள்ளியவளைச் சந்தைக் கருகாமையில் நடந்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## தேயிலையில் நஞ்சு கலப்பு எச்சரிக்கை:

# கப்பலை தடுத்து நிறுத்தி தேயிலை பரிசோதனை நடந்தது!

(கொழும்பு)
ஏற்றுமதியாகும் தேயிலையில் நஞ்சுகலக்கப்படுவதாக வெளியான எச்சரிக்கையைத் தொடர்ந்து ஏற்றுமதியாகும் தேயிலை, கடுமையான பரிசோதனைக்குள்ளாகிறது.

அரசாங்கமும், தேயிலைச் சபையும் அவசர பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தேயிலையில் நச்சுத்தன்மை கலக்கப்படுவதாக வெளிவந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து பெருந்தொகையான தேயிலையை ஏற்றிக்கொண்டுசென்ற கப்பல் ஒன்று தடுத்துநிறுத்

(5-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## தேவை

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவர்களுக்கு முன்னுரிமையும், திறமைக்குத் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். 10 - 1 - 86 இற்கு முன் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். "Teens Copy" 514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2709

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் சைவ ஹோட்டலுக்கு தமிழ் நாட்டு முறைப்படி சைவ உணவும் சகல பலகாரவகைகளும் தயாரிக்க அனுபவமுள்ள பண்பும் நல்லொழுக்கமும் உள்ள சமையல்காரர்கள் தேவை. ஆகக்குறைந்த மாதச் சம்பளம் 2500/-. பிராமணர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் திறமை வாய்ந்தசுறுசுறுப்பான ரீ மேக்கரும் தேவை திறமைக்கேற்ப வேதனம் கொடுக்கப்படும். விளம்பர இல: C-7, C/o ஈழநாடு,. யாழ்ப்பாணம். (C-7)

## விற்பனைக்கு

1½ பரப்பு காணி கிணற்றுப் பங்குடன் தாவடி முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு: சி. நாகேஸ்வரன், லட்சுமி பிறியை, பத்திரகாளிகோவில் ஒழுங்கை, தாவடி தெற்கு, கொக்குவில். [2744]

செம்மணி வீதி, நாயன் மார்க்கட்டு ஆஸ்பத்திரிக் கருகாமையில் பாதுகாப்பான சூழலில் மின்சார வசதியுள்ள புதிதாக கட்டியவீடு 3¼ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. சட்டத்தரணி, மகேசன், வைமன் வீதி, நல்லூர். (2733)

## வகுப்புகள்

G. S. Q. (Bio) 1986 New batch will start on 11 - 01 - 1986 Home Science Diploma [மனையியல் டிப்பிளோமா] Montessori Diploma Teachers Training [பாலர் பயிற்சி] வகுப்புகள் எதிர்வரும் 11 - 01 - 1986 ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளவும். செய்முறை பயிற்சிகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [2732]

A/L Physics திரு. நந்தகுமார், மின்னியல் - திங், புதன், வெள்ளி 2 - 30, பொறியியல் - செவ், வியாழன் - 2 - 30, வெப்பவியல் செவ், வியாழன் 3-30, மின்காந்தவியல் - சனி, ஞாயிறு 7- 30, ஒளியியல் சனி, ஞாயிறு 8-30 ஆரம்பம்: 1-1-86. Bond Institutes, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2710

## வாடகைக்கு

இலக்கம் 174/1, கண்டிவீதி அரியாலையில் கச்சேரி பஸ்ஸ்ரான்டுக்கு அண்மையில் மின்சாரம், தண்ணீர்வசதியுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: க. பாலேந்திரன், 76/1, இலந்தைக்குளம் வீதி, மாம்பழம் சந்திக்கு அருகாமையில், அரியாலை, யாழ்ப்பாணம். C21

## மணப்பந்தல்

விரட்விஸ்வகுலம் பிரமமேநம் ரோகினி நட்சத்திரமுள்ள படித்த அழகுள்ள 29 வயதுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புள்ள மணமகனுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அழகுள்ள மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு 299 (497), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (C-30)

## வைத்தியம்

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சருமவியாதிகள், தொய்வு, கண்ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமானவியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும், சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மங்களாம்பிகை D. A. M. மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, அரசவீதி, நல்லூர். 2530

## FOR SALE

Ammeters, Avometers, Coil winding machines and Transformers. Opposite Telli Engineering Industries, K K S. Road, Tellippallai. (C-12)

## மின்தடை

யாழ். மாநகர சபை எல்லைக்குள்

இலங்கை மின்சார சபையின்

## முக்கிய அறிவித்தல்

1986-01-05-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலை காரணமாக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை யாழ்.மாநகர சபை எல்லைக்குளுள்ள எல்லா இடங்களுக்கும் மின் விநியோகத்தடை ஏற்படும் என சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின்நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
**மின் பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.
(A 08)

## பால் மா அன்பளிப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ் செஞ்சிலுவைச் சங்க தாவடிப்பகுதியிலுள்ளபோஷாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக பால்மாவை அன்பளிப்புச் செய்யவுள்ளது.

தாவடி பிரஜைகள் குழுவின் தலைவர் திரு, கி. செல்லத்துரை இது தொடர்பாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் விடுத்தவேண்டுகோளை அடுத்து வழங்கப்பட்ட இந்த பால் மா தற்போது இப்பகுதியிலுள்ள பொது நல நிறுவனங்களுக்கு ஊடாக போஷாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

### அரியாலையூர் நாதஸ்வர கலைஞர் N. R. மகேந்திரன்

உலகத் தமிழ் மகளிர் மகாநாடு மலேசியா கோலாலம்பூர் மாரியம்மன் காஞாங் கும்பாபிஷேகத்தில் கலந்து சிறப்பித்து நாடு திரும்பியுள்ளார். முதன்முதலாக ஈழத்து சிதம்பரத்திலும் வாசித்துள்ளார்.

நாதஸ்வர வித்துவான்
N. R. மகேந்திரன்
(C-29)

### யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1986

### துரிதமீட்டல் வகுப்புகள்

86ம் ஆண்டுப் பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் 6-1-86ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றுக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**அதிபர்.**
தொலைபேசி எண்: 22617,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[2465]

## வெற்றுச் சாக்கு விற்பனைக்கு

இச்சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விமூலம்விற்பனைக்குஇருக்கின்றன. ரூபா 10/- மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்திப் பெறும் கேள்விப் பத்திரங்களை, மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாகச் சங்கத்தில் ரூபா 100/-செலுத்தி பதிவுத்தபால்மூலம் 11-01-86க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டிருத்தல்வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
கட்டைவேலி-நெல்லியடி
ப நோ. கூ. சங்கம்.
கரவெட்டி,
01-01-86.
(A19)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சமாதான சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

பிரப்பங்குளம் பொது நல சேவை சங்கத்தின் ஆதரவில் அப்பகுதியில் சமாதான சபையொன்று அங்குராப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மக்களிடையே ஏற்படும் பிணக்குகளையும் சச்சரவுகளையும் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள இன்றைய நிலையில் மனிதாபிமான அடிப்படையில் சுமுகமாகத் தீர்த்து வைப்பதையே இச்சபை நோக்கமாக கொண்டு செயற்பட்டு வருகிறது.

இக்குழுவின் பரிசீலனைக்குட்பட்டது, கிழக்கே காங்கேசன்துறை வீதியையும், தெற்கே நாவலர் வீதியையும், மேற்கே மானிப்பாய் வீதியையும், வடக்கே ஐயனார் கோயில் வீதியையும் எல்லைகளாகக் கொண்ட வண்ணார்பண்ணையின் ஒரு பகுதியாகும். [ச]

## நவீன மரத்தளபாடங்கள்

★ கட்டில்கள், விஷேட அம்சங்களுடன் மேசை அலுமாரிகள், சாப்பாட்டு மேசை கதிரைகள், மாணவருக்கான மலிவு மேசைகள் உற்பத்தியாளரின் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
★ போம் குஷன் செட்டி செட், கிளாஸ் கபினெட், T. V. STANDS, KITCHEN CABINETS. குறித்த நேரத்தில் உற்பத்தியாளரின் விலைக்கு செய்துகொடுக்கப்படும்.
★ வீட்டு நிலை, யன்னல், கதவுகள், சகல தச்சு வேலைகளை குறித்த நேரத்தில் செய்திட:

**United Engineers Carpentry Workshop,**
**சாயி மர அரிவு ஆலை,**
91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
[C 26]

## காணி விற்பனவு

1. யாழ்ப்பாணம் கச்சேரி கண்டி வீதிக்கு அண்மையாக 4 பரப்பு. வீடு கட்டக்கூடிய காணி.
2. யாழ். ஆஸ்பத்திரி வீதியாக இரு கடைகள் (வங்கிகளுக்கு அண்மையில்)

31-03-1986 வரை கொடுக்கப்படும் வட்டி விகிதங்கள்

1 வருடத்துக்கு — 22% - 24%
6 மாதங்களுக்கு – 18%

விபரங்களுக்கு:
**J. P. T. Ltd.**
3, நவீனசந்தை, (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
[A 17]

## கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி வகுப்புக்கள்

செரம்பூர் சர்வகலாசாலை B. Th [Bachelor of Theology], B. D. [Bachelor of Divinlty] வகுப்புகளுக்கான விரிவுரைகள்:

1987 ஆனிமாதம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் ஆரம்பமாகும்.

பெப்ரவரி 1987இல் நடைபெறும். பிரவேசப் பரீட்சைக்குரிய ஆயத்த வகுப்புகள் 1986 பங்குனி 1 ந் திகதி ஆரம்பமாகும்.

குறைந்தபட்சம் G. C. E (O/L) சித்தியடைந்த கிறிஸ்தவர்கள் முழுநேர மாணவர்களாக பயிற்சிநெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பயிற்சி நெறியில் அனுமதிக்கப்படுவோருக்கு உதவிப்பணம் (SCHOLARSHIPS) கொடுக்கப்படும்.

திருப்திகரமாக பயிற்சி வகுப்புகளை முடித்து வெளியேறுவோருக்கு தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தில் முழு நேர ஊழியர்களாக பங்குபெற வாய்ப்புண்டு.

முழு விபரங்களுக்கும்
உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய
**கடைசித் திகதி: ஜனவரி 31, 1986**

முகவரி:
பதிவாளர்,
**பொதுநிலையாளர் — நற்தூதுப்பணி பயிற்சிநிலையம்,**
மே/பா கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்,
மருதனமடம், சுன்னாகம்.
[2430]

# சர்ச்சைக்குரிய இங்கிலாந்து

## கிரிக்கெட் குழு இலங்கை வருகிறது

[லண்டன்]

தென்னுபிரிக்காவுடன் தொடர்புகளை வைத்துவந்த நான்கு ஆட்டக்காரரை உள்ளடக்கிய சர்ச்சைக்குரிய இங்கிலாந்தின் 'பி' கிரிக்கெட் குழு இலங்கைவர அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இக்குழு மூன்று நாடுகள் கிரிக்கெட் விஜயம் ஒன்றை ஆரம்பிக்குமுகமாக நேற்று லண்டன் 'ஹீத்ரோ' விமான நிலையத்தில் குழுமியிருந்தது.

ஆயினும் இக்குழுவின் முதல் விஜயமான பங்களாதேஷ் விஜயம் கடைசி நிமிடத்தில் பங்களாதேஷ் அரசாங்கத்தினல் ரத்துச்செய்யப்பட்டது.

இக்குழுவில் அங்கம்வகிக்கும் கிறிஸ் ஸ்மித் கிம் பார்னிஜ், மொ கஸ்ஸன், பில் அதே ஆகிய நால்வரும் தென்னுபிரிக்காவில் பயிற்றப்பட்ட (கிரிக்கெட் ஆட்டத்தில்) அங்கு விளையாடியும் உள்ளதினால் பங்களாதேஷ் அரசாங்கம் இவ்விஜயத்தை ரத்துச்செய்தது.

குழுவின் இரண்டாம் விஜயமான இலங்கைப் பயணம் திட்டமிட்டபடி புதன்கிழமை ஆரம்பமாக இலங்கை அரசாங்கம் உறுதி அளித்திருப்பதாக லண்டன் கிரிக்கெட் சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

இந் நால்வரையும் உள்ளடக்கியுள்ள காரணத்திஞல் கடைசிக் கட்டமான சிம்பாவே விஜயமும் ரத்துச்செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது,

தென்னுபிரிக்காவில் வெள்ளையராட்சியிஞல் கடைப்பிடிக்கப்படும் இனவெறிக் கொள்கையை கண்டிக்குமுகமாக பல நாடுகள் தென்னுபிரிக்காவுடன் கலை, கலாசார, வர்த்தக தொடர்புகளை துண்டித்திருப்பது தெரிந்ததே! [செ]

# இராணுவ நடமாட்டச் செய்திகளுக்குத் தணிக்கை

[கம்பாலா]

உகண்டாவில் இராணுவக்கின் நடவடிக்கைகளை வெளியிடாமல் பத்திரிகைத் தணிக்கைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

உகண்டா இராணுவம், தலைநகரான கம்பாலாவிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வன்செயல்களில் ஈடுபடுவதாகக் கூறப்பட்ட பல குற்றச்சாட்டுகளின் விளைவாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உகண்டா இராணுவத் தலைவர் டிட்டோ ஒகேல்லோ இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார். அவர் தமதுரையில்: இராணுவம் சில வன்செயல்களில் ஈடுபட்டது உண்மையெனினும், பெரும்பாலான வன்செயல்களை கொலைகாரர்களும், கேடிகளுமே புரிந்துள்ளனர் என்றார்.

கம்பாலாவில் உகண்டா இராணுவத்துக்கும் பிரதான கிளர்ச்சியாளர்களிடையேயும் இருவாரங்களுக்கு முன் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையைமீறி உகண்டா இராணுவம் சுமார் 300 பேரை கொலைசெய்துள்ளது என பிரதான கிளர்ச்சிக் குழுக்கள் உகண்டா இராணுவத்தை குற்றம் சாட்டியுள்ளன.

புதிய உத்தரவின் பிரகாரம் இராணுவம் சம்பந்தப்பட்ட சகல செய்திகளும் விசேட இராணுவ கமிட்டியின் அங்கிகாரம் பெற்றபின்பே பிரசுரிக்கப்பட அனுமதியளிக்கப்படும்.

முன்னுள் சர்வாதிகாரியான இடி அமின் 1979 இல் பதவி கவிழ்க்கப்பட்டபின் இத்தகைய ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல்தடவையாகும். [செ]

# சோவியத் படைகள் வாபஸ் பெறப்படுமா?

[நியுயோர்க்]

சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருக்கும் தமது படைகளை விலக்கிக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சோவியத் படைகளை ஒரு வருட காலத்திற்குள் ஆப்கானிஸ்தானில் இருந்து விலக்கிக் கொள்ளும் திட்டமொன்றை ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஐ. நா. உபசெயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதையடுத்தே இந் நம்பிக்கை வெளிப்பட்டிருக்கிறது.

ஆப்கானிஸ்தானின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக சோவியத் படைகள் சுமார் 6 வருடகாலமாக அங்கு நிலைகொண்டிருப்பது தெரிந்ததே! [செ]

# "அறியாமையை நீக்கி அறிவைப் பெருக்குபவர் குரு"

## பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள்

[யாழ்ப்பாணம்]

''குருவிஞல் வழங்கப்பட்ட தீட்சை முதலிய சம்ஸ்காரங்களால் தகுதிபெற்றுச் சிவாசாரியராகி, ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் இயற்றுபவரையே ஆகமங்கள் குரு எனப் போற்றுகின்றன.

குருவுக்கு இந்து சமயத்தில் ஒருசிறந்த இடமுண்டு. குரு எமது அறியாமையை நீக்கி அறிவைப் பெருக்குபவர் ஆசார்ய தேவோ பவா என்ற வேதவாக்கியம் இந்து சமயம் குருவைத் தெய்வத்தின் நிலையில் வைத்துப் போற்றுவதை குறிக்கிறது. எனவே நம் குருவுக்கு முக்கியத்துவமளித்து அவர் மீது பக்திசெலுத்த வேண்டும்'' என்று ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான பிரதம சிவாசாரியார் சிவ ஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்கள் அவர்களுக்குநடத்தப்பட்ட பாராட்டு விழாவிக்குத் தலைமைவகித்துப் பேசிய யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிக பீடத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் குறிப்பிட்டார்.

குருக்கள் தொடர்ந்து பேசுகையில் ''பிரபல்யமான ஓர் ஆலயத்தில் 54 ஆண்டுகள் தொடர்ந்து சிவாசாரியாராக இருந்துவருவது ஒரு பெரிய சாதனையாகும் இதற்குக் காரணம் குருக்களது கடமையுணர்ச்சியும் காரைநகர்ப் பெருமக்கள் குருக்கள் மீதுகொண்டுள்ள பேரன்பும் அவருக்கு நல்கிவரும் ஒத்துழைப்புமேயாகும்'' என்றும் குறிப்பிட்டார்.

பாராட்டுவிழாச் சபைத் தலைவர் திரு. இ, வைத்தியலிங்கம் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

கோப்பாய், சிவஸ்ரீ ச. சுப்பிரமணிய சிவாசாரியர் சபையின் சார்பில் குருக்களுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்வித்தார்.

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான கர்த்தர்களாகிய திருவாளர்கள் அ. ஆண்டிஐயாவும் து முருகேசுவும் சபையின் சார்பில் குருக்களுக்குப் பொற்கிழி வழங்கினர்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிக விரிவுரையாளர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், வித்துவான் வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர்.

சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் தமது பதிலுரையில் ''தமது தகப்பஞராகிய சிவஸ்ரீச கணபதீசுவரக் குருக்கள் 54 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் முதன் முதல் பூசை செய்ய ஆரம்பித்தபோது கடமையைச் செய் பலனை எதிர்பார்த்திராதே என்று கூறியமை இன்றும்தமது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறதென்றும் அவர் கூறியதை இன்றும் தாம் கடைப்பிடித்து வருவதாகவும்கூறிஞர். ஆதீன கர்த்தாக்களும் காரைநகர்ப் பெருமக்களும் தம்மீது காட்டி வருகின்ற அன்பைத் தம்மால் என்றுமே மறக்கமுடியாதெனவும் கூறி எல்லோருக்குப் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பாராட்டு விழாச் சபைக் காரியதரிசி திரு. க. அமிர்தசிங்கம் நன்றி கூறிஞர், [செ]

# பம்பாயில் கஞ்சாமூடைகள் கைப்பற்றப்பட்டன!

[பம்பாய்]

பம்பாய் துறைமுகமொன்றில் நேற்றுசுமார் மூன்று தொன் நிறையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பப்படவிருந்த 400 மூடைகளில் இருந்தே இது கைப்பற்றப்பட்டுள்ளது. மூடைகளில் 'டோரிக் அமிலப் பவுடர்' என்று பெயரிடப்பட்டிருந்ததாக இம் மூடையைக் கைப்பற்றிய துறைமுக அதிகாரிகள் குழுவொன்று தெரிவித்தது.

இவற்றின் மதிப்பு சுமார் 1 கோடியே 77 லட்சம் ரூபாவுக்கு மேல்என இவ் அதிகாரிகள் கணிப்பிட்டுள்ளனர். [செ]

# அகதிகளின் குறைகளை நேரில் அறிந்தனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்கு கிளிநொச்சி பிரஜைகள் குழுவால் நியமிக்கப்பட்ட தூதுக்குழுவினர் விஜயம் செய்து அகதிகளின் குறை நிறைகளை கண்டறிந்தனர்.

அமைதிபுரம், ஆரோக்கியபுரம், கோணாவில், குருகுலம் ஆகிய நான்கு முகாம்கள் கிளிநொச்சியில் உள்ளதாகவும், நாளாந்த உணவுத்தேவை உட்பட மருத்துவ சுகாதார வசதிகளுடன் ஆடைகளும் இவர்களுக்கு தேவைப்படுவதாகவும் பிரஸ்தாப தூதுக்குழுவினர் பிரஜைகள் குழுவிடம் கையளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் ப. வை ஜெயபாலன், எஸ். கோ. பால், எம். குலசிங்கம்பிள்ளை ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவினரே பிரஸ்தாப முகாம்களுக்கு விஜயம் மேற் கொண்டனர்.

திருகோணமலை போன்ற இடங்களில் இருந்து அண்மையில் கூட பல குடும்பங்கள் அகதி முகாமிற்கு வந்துள்ளதாகவும், இவர்கள் முகாம்களில் பதிவு இன்றி அரச உதவி இன்றி ஏனைய அகதிகளின் தயவில் வாழ்வதாகவும் பிரஸ்தாப தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

# "முள்ளியவளையின் அறிவுத் தரம் கௌரவிக்கப்பட்டது"

(யாழ்ப்பாணம்)

''முள்ளியவளையின் அறிவுத் தரம் கௌரவிக்கப் பெறுகிறது. கல்வி என்றும் அழிவில்லாதது. கற்கும் தோறும் அறிவை வளர்த்துச் செல்லும் ஆற்றல் உடையது. சுப்பிரமணிய ஐயர் கலாநிதிப் பட்டம் பெற்றமை இதற்கோர் சிறந்தஎடுத்துக்காட்டாகும்.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் கலாநிதிப் பட்டம் பெற்றமையை சௌரவிக்குமுகமாக முள்ளியவளை கிராமோதயசபையினர் எடுத்த பாராட்டு விழாவில் தலைமை வகித்து பேசிய கிராமோதய சபைத்தலைவர் திரு. க. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவை முல்லை மாவட்டத்தின் முதுபெருங் கலைஞர் சி உ. நடனசபாபதி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். திவகலாலா, உதவி அரச அதிபர் திரு எஸ். கே. சர்வாநந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரும்பாகஅலுவலர்செல்வி சு. இராசலட்சுமியின் தமிழ் வாழ்த்துடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பட்டதாரி மாணவன் திரு சி தில்லைநடாராசா வரவேற்புரை வழங்கிஞர். வற்றுப்பழை மகா வித்தியாலய அதிபர் திரு சி. கனகையன். முள்ளியவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு சி. மார்க்கண்டு, சமாதான நீதிபதி திரு சி தியாகராசா, சட்டத்தரணி திரு த. பரஞ்சோதி, குமுளமுனைக் கவிஞர் திரு. எஸ் சுப்பிரமணியம் ஆசிரியர்கள் திரு கனக தவராசா, திரு மு.பாலசிங்கம், திருமதி இ. சந்திரபாலன் உட்பட பலர் கலாநிதி சுப்பிரமணிய ஐயரின் புலமைத் திறனையும் குண நலன்களையும் பாராட்டிப் பேசினர்.

பதிலுரை வழங்கிய கலாநிதி சுப்பிரமணிய ஐயர் தனது கல்வி வாழ்க்கையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தனும் வகித்த பங்கினை நன்றியுடன் நினைவு கூர்ந்ததுடன் தனக்கு அளித்த இந்தப் பாராட்டுமுள்ளியவளையில்எதிர்காலத்தில் பலதுறைகளிலும் கலாநிதிகள் உருவாவதற்கான உந்து சக்தியாக அமையுமென நம்பிக்கை தெரிவித்தார்.

வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் திரு.ச. தங்கராசா சுப்பிரமணி ஐயருக்கு பொன்னுடை போர்த்தி கௌரவித்

(7-ம் பக்கம் பார்க்க)

## மேன்முறையீட்டு நீதிமன்ற மனு:

# சாவகச்சேரி மாவட்ட நீதிபதி நிராகரித்தார்!

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் அளிக்கபபட்ட தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிமன்றம் ஊடாக அனுப்பப்பட்ட மனு ஒன்றை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம் நிராகரித்தார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனுப் காரியப்பர் குடியியல் வழக்கொன்றில் அளித்த தீர்ப்பை எதிர்த்தே மேன்முறையிட்டுக்கு மனு செய்யப்பட்டிருந்தது.

மனுதார் சார்பில் சட்டத்தரணி எஸ். கே. திரவியநாயகமும், எதிர் மனுதார் சார்பில் சட்டத்தரணி எம். எஸ். பஞ்சலிங்கம் சட்டத்தரணி பாலகிருஷ்ணன் அனுசரணையுடன் ஆஜராஞர்.

நீதிமன்ற தகவல் மேன்முறையீடு செய்கிறபோது, மேன் முறையீட்டு ஆவணங்களை மேன் முறையீட்டு மன்றத்திற்கு அனுப்பிவைப்பது. வழக்கம்.

இந்த வழக்கை பொறுத்த மட்டில், மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு அனுப்பும்போது மேன் முறையீடு செய்வதற்கு தாக்கல் செய்யப்படும் பத்திரங்கள் சட்டத்திற்கு அமைவாகச் செய்யப்பட்டதா என்பதை பரிசீலனை செய்து தீர்மானிப்பதற்கு இந்த நீதிமன்றத்திற்கு (மாவட்ட நீதிமன்றம்) அதிகாரம் இருக்கிறது என்றும், சட்டத்திற்கு அமைவாக தாக்கல் செய்யப்படாத பட்சத்தில் அந்த மனுவை நிராகரிக்க உரிமை இருக்கிறதென்றும் கூறிய நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம், இந்த மனு சட்டத்திற்கு அமைவாக தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறி மனுவை நிராகரித்து தீர்ப்பளித்தார். (க)

## ரூபவாஹினி

மாலை:

5-00 செய்திகள்
5-05 சிங்கள நிகழ்ச்சி
5-30 கார்ட்டூன்
6-00 வண்ணத்திப்பூச்சித் (தீவு சிறுவர் நிகழ்ச்சி)
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 வாத்திய விருந்து (தமிழ்)
7-25 'குரங்கு' அங்கம் - 1
8.00 செய்திகள் (சிங்களம்)
8-20 'குரங்கு' தொடர்ச்சி
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25 நடைமுறை விவரணம்
10-45 உலக அறிக்கை
11-15 ஒளிபரப்பு முடிவு

### மணிவாக்கு

இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்.
—குறள்

(துணிவான அறிவு அடைந்தவர் ஆபத்துக்காலத்திலும் இழிவான காரியங்களைச் செய்யமாட்டார்.)

# நமதுநோக்கு

## இனப்பிரச்னை தீரவழி

'விசர்மாருத நிலையில் விவாகமில்லை; ஆனால் விவாகமே விசருக்கு மருந்து.' இது சோதிடமல்ல. வாழ்க்கையில் நாம் காணும் சங்கடநிலை.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடி உரிமைகள் வழங்கப்பட்டதும், ''பொதுத்தேர்தல் நடத்தி இனப்பிரச்னைக்குத் தீர்வு காணுங்கள்'' என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நாம் மேலே குறிப்பிட்ட சங்கடநிலைஅம்மையார் அறியாதது ஒன்றல்ல. தேர்தல் நடைபெறுவதற்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்று கூறியிருப்பது இதனை விளக்குகிறது.

இந்தச்சூழ்நிலை எவ்வாறு உருவாகும்? தமிழ்ப்பகுதிகளைத் தவிர்ந்த (வடக்கும் கிழக்கும்) ஏனைய பகுதிகளில் தேர்தல் நடத்துவதாலான பயன் என்ன?

எனவே தேர்தல் என்ற விவாகம் நிறைவேறுவதற்கு வழி ஏது? இது ஒரு சாமானிய உவமானம் அல்ல. இதனை நாம், இந்தியாவின் பஞ்சாப், அஸாம் மாநில தேர்தல்கள் மூலம் விளக்கலாம்.

தேர்தல் நடைபெற்று சமாதானம் விரும்பும் மக்கள் அன்றாட வாழ்க்கையில் பாதுகாப்பாகவும் மதிப்புடனும் வாழவேண்டுமென்று பரகீதப்பிரயத்தனம் செய்தார் ராஜீவ் காந்தி.

தம்முடைய கட்சிக்குத் தோல்வியானாலும் நாட்டின் சுபீட்சத்துக்குத் தேர்தல் அவசியமென்று கொண்டதால் தேர்தலுக்குரித்தான சுமுக நிலையை இரண்டு உடன்பாடுகள் மூலம் ஏற்படுத்தினார். பஞ்சாப்பில் அகாலிதள் தலைவர் லோங்கோவால் உயிரிழந்தபோதும் கவலை கொண்ட ராஜீவ், காரியசித்தியில் கண்ணாகவிருந்தார் தேர்தல் தேதியையே பின்போட இணங்கவில்லை.

எனவே பிணக்குறும் இனங்கள் மத்தியில்- கொழுந்துவிட்டு எரியும் நெருப்பருகே குளிக்கமுயல்வது மடமை.

'இனப்பிரச்னை' என்று இன்றைய தமிழ் மக்களின் உரிமைப்போரை குறிப்பிட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாக்கா, இறந்த கணவரின் உள்ளுணர்வுக்கு உரித்தான அரசியல் ஞானமுடையவரென்று கருத இடமுண்டு.

'தமிழ்தேசியம்' என்ற தலைப்பில், அது ஏற்படுத்தும் சமுதாய பிணக்குகளையும், இன்றைய இனப்பிரச்னையையும் புரிந்துகொள்ள உதவும் பேருரை, ஹன்டி பேரின்பநாயகத்தின் இரண்டாவது நினைவுப் பேருரையாக நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி, இனப்பிரச்னையின் வரலாற்றை 'தமிழ்த்தேசியம்' என்ற பெருந்தலைப்பில் விரிவாக விளக்கியுள்ளார்.

நினைவுக்குரிய நாயகர் பேரின்பநாயகத்தை நேரில் கண்ட அனுபவத்தை தமது தந்தையாரிடம் கூறிய போது ''நல்லாரைக் காண்பதுவும் நன்றே'' என்ற ஔவையாரின் முதுமொழியில் அதனைப் பண்டிதர் கார்த்திகேசுவரவேற்றதாக குறிப்பிட்டிருக்கிறார்.

இனப்பிரச்னையை தமிழ் தேசியம்மூலம் விளக்கவல்ல கருத்தை பேரின்பநாயகம் என்ற நல்லவர், சுமார் 55 வருடத்துக்குமுன் யாழ்ப்பாண வாலிபமாநாடுமூலம் விளக்கியிருந்தார். மிகநுட்பமான சிந்தனைக்குரிய விளக்கம் அது.

சொல்வதன் பொருள் உணர்ந்து சொல்பவர், துணிவான அறிவுடையோர், எக்காலத்திலும் நியாயமின்றி கொள்கையில் மாறாதவர், நல்லவர் மட்டுமல்ல வல்லவர்.

தேர்தலில் வெற்றிபெறாதவர்கள்வல்லவர்கள் அல்ல என்று நினைப்பதும், தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி பீடம்ஏறுபவர்கள் எல்லோரும் நல்லவரென்பதும் தவறான கருத்துக்கள்.

ஹன்டி பேரின்பநாயகத்தின் தீர்க்கதரிசனத்தை விரிவுரைத் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தது பேராசிரியரின் பேருரைக்கு மிகப் பொருத்தமாக இருந்தது.

''சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இலங்கையைவிட சொந்த நாடு வேறெதுவுமில்லை. இந்த அடிப்படை உண்மையைக் கொண்டே வருங்கால அரசியல் அமைப்பைஉருவாக்க வேண்டும்.''

''கணிசமான அளவிற்கு இங்கு வாழும் தமிழ்மக்கள் தங்கள் சொந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரஜையாக வாழ ஒருபோதும் ஒருமித்துக்கொள்ளார்.''

எனவே இன்றைய இனப்பிரச்னை தமிழ் தேசியத்தின் ஒரு முக்கிய அம்சம்.

தமிழர் உரிமைப்போர் என்று நாம் அந்தரப்படும் போது, சிங்கள இனத்தின் பிரச்னையை மறந்துவிடுவது இயற்கை. இன்று இலங்கை அரசின் ராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் கொலை நாடகத்தை நடத்துகிறது; தமிழர் இங்கு சிறுபான்மையானாலும், உலகின் தனியினமான சிங்கள இனத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியநிலை ஒன்று உண்டு என்பதே தென்னிலங்கையில் நிலவும் அச்சம்.

எனவே இனப்பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படுவது நாட்டுக்கும், இரு இனங்களுக்கும் இன்றியமையாதது.

இதற்குப் போராடும் தமிழ் இளைஞர்களின் கருத்துக்கள் ஒன்றுபட்டமுறையில் ஆராயப்படுவது தீர்வின் முக்கிய பணியாகும். இதனைத் திசைதிருப்பும் எந்த முயற்சியும் நிரந்தர சமாதானத்துக்கு உதவ மாட்டாது.

# 'ஈழத்தில்பூத்தசிவமணமலர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி'

## மலேசிய மணிவிழாவில் டாக்டர் சேதுராமன்

''செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு ஏராளமான பட்டங்கள் பல இடங்களிலும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப்பட்டங்களில் ஒன்றுன 'திருவாசகக் கொண்டல்' என்ற பட்டம் மலேசிய மண்ணிலே வழங்கப்பட்டது, கொண்டல் என்றால் மழை மேகம் ஆழமான கருத்துக்களை சித்தாந்தக்கருத்துக்களை மழையைப்போல பொழியும் ஆற்றலுடையவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்பதனாலே 'திருவாசகக்கொண்டல்' என்றபட்டம் இங்கு வழங்கப்பட்டது''

இவ்வாறு மலேசியாவில் நடந்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மணிவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய தமிழ்நேசன் பத்திரிகையின் நிருபராக இயங்குஞர் டாக்டர் புலவர் சேதுராமன் தெரிவித்தார்.

சிலாங்கூர் இலங்கை சைவ சங்கம், மலாய அருள்நெறிக் கூட்டம், சங்கீத அபிவிருத்திச் சபா, கோலாலம்பூர் மகாமாரி அம்மன் கோவில் பரிபாலனம் என்பன இணைந்து செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மணிவிழா ஒழுங்குசெய்திருந்தன. இந்த மணிவிழா குலாம்பூர் ஸ்கொட் ரோட் கந்தசாமி கோவில் மண்டபத்தில் டாக்டர் க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றது.

### சமயத்தூதுவர்

டாக்டர் சேதுராமன் தனது வாழ்த்துரையில் மேலும் தெரிவித்ததாவது; செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இலங்கையிலிருந்து இங்கு எத்தனை குறைவந்தாலும் அவருடைய பயணங்கள் ஒவ்வொன்றும் பெரும் பயனையே தருகின்றது. ஏனெனில் அவர்கள் சமயத்தூதுவராக, கலைகலாசாரபண்பாட்டுத் தூதுவராக, தமிழ்மொழித்தூதுவராகஇங்கு வருகின்றார். அவர்களுடைய வருகையினால் தெரிந்துகொள்ளக் கூடிய, தெரிந்துகொண்டிருக்கிற கருத்துக்கள் ஏராளம்.

ஈழத்திலே பூத்த சிவமண மலர் அம்மையார் அவர்கள் சாதாரண மலருடைய மணம் நான்கு வீடுகளுக்குத் தெரியுமென்றால், இந்த சிவமண மலருடைய மணம் பலநாடுகளுக்கும் பரவுவதில் வியப்பில்லை. அவர்கள் அழியாத பொருள் பற்றிப் பேசுகிறார்கள் என்றும் நிலைத்த பொருள் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் செய்கின்ற வேள்வி சிவபுண்ணியமானது. அவர்கள் சிவத்தைப் பற்றி ஓதுகின்றார்கள் அதனால் அவர்களுக்கு சிவபுண்ணியம் எங்களைப்போன்றவர்களை ஓதுவிக்கிறார்கள்; ஓதச் செய்கின்றார்கள். எங்களுக்குச் சிவபுண்ணியம் இப்படி எல்லோருக்கும் சிவபுண்ணியம். ஆம் அம்மையார் வருகின்ற நிலைஎல்லாம் சிவபுண்ணியம் அமைந்துள்ளது என்று கூறலாம்.



தொகுப்பு:
என். கே. துரைசிங்கம்

### தங்கம்மா தங்கு-அம்மா

அம்மையார் நமது நாட்டுக்கு வரவேண்டும், பயன் பல எங்களுக்குத் தரவேண்டும் என்பதே என்னுடைய ஆசை. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை இங்கேயே தங்கு-அம்மா என்றுகூற வேண்டுமென்பது என்னுடைய ஆசை. ஆனால் குடிநுழைவுத் துறையினர் அனுமதிக்கமாட்டார்கள். அவர்கள் அனுமதிக்காவிட்டால் என்ன நம்முடைய உள்ளத்திலே அவருடைய கருத்தைப் பகிர்ந்துகொண்டால், இங்கே அம்மையார் தங்கித்தான் நிற்கவேண்டும். இதை அவர்களாலேகூட மறுக்கமுடியாது. ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும்.

### இதுபோதாது

டாக்டர் பேரம்பலம் தனது தலைமையுரையின் போது: ''கடந்த முப்பது ஆண்டுகளாக சைவத்தையும் தமிழையும் கண்ணும் இமையும்போல் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வளர்த்து வந்தார்கள். அவருடைய சேவைக்கு நாம் செய்யும் இந்த மணிவிழா போதாது'' என்றார்.

ஸ்கொட் ரோட் கந்தசாமி கோவில்பிரதமகுருதிரு. ச. பரமேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குகையில் ''இலங்கையிலே பிறந்து வளர்ந்து ஆசிரியத் தொழில் செய்தாலும் சமயப்பணிகளையும் சமய பிரசங்கங்களையும் எல்லாநாடுகளுக்கும் சென்று நடத்திசகல மக்களாலும் பெருமதிப்புக்கும் ஆளானவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தை நிர்வாகம் செய்துஆலயச் சுற்றுடலிலே சைவ நகரமாக மிளிர வைத்துக்கொண்டிருக்

(7-ம் பக்கம் பார்க்க)

# ''இளைஞர் இயக்கத்தைச் சரியாகப் புரிந்துகொள்வது அவசியம்''

## பேராசிரியர் சிவத்தம்பி கருத்து

[கா. யோகநாதன்]

தமிழ் இளைஞர்களின் அரசியல் கோட்பாடோடு, இராணுவ செயல்பாடும் சிதைந்திருக்கிறது. இது முன்னெரு போதும் காணப்படாததாகும். இப்பிரச்னை ஒவ்வொரு தமிழரின் வாள்வின் பிரச்னையாக இருக்கிறது.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் அறிஞர் ஹண்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்த பேருரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

ஒறேற்றர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

இது ஒரு தேசிய இனப் பிரச்னை மட்டுமன்றி சமூக மாற்றம் பற்றிய பிரச்னையுமாகும்.

போராட்டங்களை தெளிவாக புரிந்து கொள்ளாமல், போராட்டம் பற்றிய அபிப்பிராயங்களை கொள்ளுதல் கூடாது. இலங்கைத் தமிழரின் தேசிய இனப் போராட்டம் தமிழரின் வாழ்வுக்கு மட்டுமன்றி, எதிர்காலத்தில் முக்கியமானதாகவும் இருக்கும். போராட்டமானது சமூக ரீதியானதும், அரசியல் ரீதியானதுமாகும். இதிலுள்ள அரசியல் பகுதியானது சமூக பகுதியை உள்ளடக்கிய தொன்றாகும்.

இன்று யுத்த சூழ்நிலை நாட்டில் இருக்கிறது. தீவிரவாதக் குழுக்களை அங்கீகரிக்க மறுத்தவர்களுக்கு திம்புபேச்சுக்கு, பின் அங்கீகரிக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது. இது தீவிரவாதிகளின் செயலைக் காட்டியுள்ளது.

இந்தியா இன்று தென்னாசியாவிலே சக்திவாய்ந்த நாடாக இருக்கிறது. தமிழ்நாடு, இப்பிரச்னையில் கொண்டுள்ள அக்கறை போதுமானதல்ல, தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தேசியவாதம்

தேசியவாதம் என்பது ஒவ்வொரு தேசிய இனமும் தமக்கென ஒருஅரசியல் அந்தஸ்தை தேடிக்கொள்வதாகும்.

1930 ம் ஆண்டுக்கு முன் தேசியவாதம் பிற்போக்கானதென்றும், சுரண்டலுடன் சம்பந்தப்பட்டதென்றும் கருதப்பட்டது.

1983-ம் ஆண்டு நாட்டின் சரித்திரத்தில் தமிழரின் தேசியவாத உணர்வுக்கு முக்கிய மைல் கல்லாக அமைந்தது. 1958, 1977 ல் நடைபெற்ற இனக்கலவரங்களினால் தமிழர்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வெளியே பாதுகாப்பாக முடியாதநிலை ஏற்பட்டது, 1983-ம் ஆண்டுக்குப்பின் தமிழர்கள் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களிலும் பாதுகாப்பாக இருக்க முடியாதநிலை ஏற்பட்டது.

1949-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. தமிழர் சரித்திரத்தில் ஒரு முக்கிய மாற்றமாகும். அதன் பெயரே இதற்கு எடுத்துக் காட்டாகும். 1956-ம் ஆண்டுக்குப் பின் இந்தமாற்றம் கூர்மையடைந்தது.

1960-க்குப்பின் சகல விதமான போராட்டங்களையும் அரசு ஒடுக்கிவந்தது. தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகமும், அரசினால் ஒடுக்கப்பட்டது.

1983-ம் ஆண்டுக்குப்பின் தென்பகுதியில் தமிழரின் தொழில்வளங்கள் சீர்குலைந்தது. தரப்படுத்தல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குரல் கொடுத்துவந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் குரல் நடுக்கப்பட்டது. இதனால் புதிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக்கழக பிரவேசத்திற்கு முற்பட்ட வாணவர்களினால் இது ஆரம்பிக்க புதிய சூழ்நிலை ஏற்பட்டது.

பின்நோக்கும் கால் சேர் பொன் அருணாசலம் தேசிய காங்கிரசையிட்டு விலகிவந்து 1921-ல் உருவாக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் அதற்குப்பின் வந்த வாலிபர் மாநாடு. அதன் பின் வந்த தமிழ் காங்கிரஸ் அனைத்தும் தமிழ் தேசியம் பூரண உருவாக உதவிய மைல் கல்கள்.

வாலிப மாநாடு காலம் போல் இன்று நட்டிக்கழிக்கக் கூடிய காலம்அல்ல. இன்றைய தமிழ்த்தேசியம் சட்டமாக ஏற்படுத்தும் சமுதாயபிணக்குகளை உணர்த்து தவறுவோமாயின் வரலாற்றை விளக்கமுடியாதவர்களாவோம்.

## மூளைக்காய்ச்சல் அபாயம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரிலிருந்து வந்து அனுமதிக்கப்பட்ட பிள்ளை ஒன்று அனுமதிக்கப்பட்டவுடன் இறந்துவிட்டது. அளவெட்டி அரியாலை ஆகிய இடங்களிலிருந்தும் இரு குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னியன்குளம் கிராமத்திலிருந்து வந்த பிள்ளை ஒன்று 24-ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

23-ம் வாட்டில் ஏழு சிறுவர்கள் மூளைக்காய்ச்சலினுல் பாதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் ஒரு சிறுமி சிகிச்சைக்குப்பின்னர் சுகமாகி வீடுசென்றுள்ளார்.

இச்சிறுவர்கள், மன்னார், பாவற்குளம், புவரசங்குளம், வவனியா, முருங்கன், கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாகும்.

23-ம் வார்ட்டில் 4 சிறுமிகளும் 3 சிறுவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இவர்கள் எல்லோரும் 11வயதிற்கு உட்பட்டவர்களாகும்.

22-ம் வார்ட்டிலுள்ள சிறுவர்களில் இரு சிறுவர்களுக்கு மூளைக்காய்ச்சல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள இரு சிறுவர்கள் பரிசோதனையில் இருந்துவருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சமயம், மூளைக்காய்ச்சலினுல் பாதிக்கப் பட்ட வேலணையைச் சேர்ந்த ஒரு பிள்ளை, சனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிறது. (க)

### கடைசிநேர வரி விளம்பரம்

### தேவை

யாழ். நகரில்உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு சமையல் வேலையில் அனுபவம் உள்ள ஒருவரும் மற்றும் குசினியில் கையுதவி செய்வதற்கு ஆட்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப இல. A 23 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். [A 23]

**தவறிவிட்டது**

தும்பளை சாதக்கடவை மாணிக்கம் புவனேஸ்வரி என்பவருடைய அடையாள அட்டை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம்- பருத்தித்துறை மினிபஸ்ஸில் தவறிவிட்டது.. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். C/33

### விற்பனைக்கு

சினைப்பட்ட நல்ல இன பசுமாடுகளும், கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 38, உடுவில் வீதி, மானிப்பாய் ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து உடுவில் வீதியில் 200 யார் தொலைவில் மானிப்பாய். [C 37]

நல்ல இன வளர்ப்பு மீன்கள் கீழ்க்கண்ட முகவரியில் விற்பனைக்கு உண்டு. இரத்தின வாசா, கருவேலடிலேன், கொக்குவில் கிழக்கு. (கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அண்மையில்). [C 48]

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
கமல்—ஸ்ரீபிரியா
**லாம் லஷ்மணன்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
ஜெய்சங்கர் - லட்சுமி
முத்துராமன்
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

ஜனவரி 7 மட்டும்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
பயங்கர கராட்டி குங்பூ சண்டைக் காட்சிகள் நிறைந்த கொழும்பில் பல மாதங்கள் ஓடிய
TEN BROTHERS OF SHALOIN
[யாழ். நகரில் முதன்முதலாக காண்பிக்கப்படுகிறது)

### முதலாண்டு நினைவஞ்சலி



யாழ். பல்கலைக்கழக மாணவன்

**இ. ரவிசேகரன்**

(சுகந்தன்)

போர்முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு, வந்ததில்லை

**தாயின் மடியில்: 30-10-1961**

**தாயக வழியில் 04-01-1985**

நண்பா!
மறுமலர்ச்சிக்கழகத்தின் வளர்ச்சிக்கும் 'தளிரின்' உருவாக்கத்திற்கும் உனது பங்களிப்பு மகத்தானது. மக்களின் விடுதலைக்காய் மரணித்த உனது நினைவுகள் என்றும் எம்முள் நிலைத்திருக்கும்.

மறுமலர்ச்சிக்கழகம்
யாழ். பல்கலைக்கழகம்
04-01-1986 C/38

### 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சங்கரப்பிள்ளை தங்கராசா**

**மலர்வு- 5-8-1933**
**உதிர்வு: 3-1-1978**

அன்பின் தெய்வமே!
எம்மையெல்லாம் தவிக்கவிட்டுச்சென்று எட்டு ஆண்டுகள் கழிந்து விட்டனவே! காலங்கள் மாறலாம். கண்ணீர் வற்றவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

உங்கள் பிரிவால் வாடும்
**மனைவி, மகள், மைத்துனர், சகோதரர், உறவினர்.**

திருமதி R. தங்கராசா
ஸ்டேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு.
A/21

### சுதுமலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மணித்தியாலமளவு வட்டமிட்ட ஹெலிகொப்டர்பின்னர் அந்த இடத்தை விட்டுமறைந்துசென்றது.

யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் விஜயம் செய்யும் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு. சுதுமலைப்பகுதியிலும் பாதிக்கப்பட்ட இடங்களைப்பார்வையிடவுள்ளது. (மா)

### திருமலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையுடன் கண்டனமும் தெரிவிப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்:

ஆயுதப்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான 31 அப்பாவித் தமிழர்களுள் ஒருகர்ப்பிணிப் பெண் உட்பட நான்குபெண்களும் 3 குழந்தைகளும் அடங்குவர். இவர்கள் அத்தனைபேரினதும் சடலங்கள் அந்த இடத்திலேயே வைத்து தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளன. என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் 200 பேர் அப்பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ. மா)

### கண்ணிவெடி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மூன்று ஜீப் வண்டிகளிலும், எட்டு கவச வாகனங்களிலும் ஆயுதப்படையினர் வந்து கொண்டிருக்கையில் சுமார் 100 யார் வித்தியாசத்தில் தரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியொன்று வெடித்ததைத் தொடர்ந்தே ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களாம்.

இச்சம்பவத்தின்போது எவரும் காயத்துக்குள்ளாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேயிலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தப்பட்டு தேயிலையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்றும் நஞ்சு எதுவும் காணப்படவில்லை என்றும் பிரபல தேயிலை ஏற்றுமதி நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் நேற்று கருத்து வெளியிட்டார்.

### டெஸ்ட் கிரிக்கெட்
## இந்திய கோஷ்டியின் 'விளாசல்'!

(சிட்னி)

சிட்னியில் இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-வதுநாளான நேற்று இந்திய அணி நான்கு விக்கெட் இழப்புக்கு அறுநூறு ஓட்டங்களைப் பெற்று முதலாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

சுனில் கவாஸ்கர் 172 ஓட்டங்களையும், மகிர்ந்தர் அமர்நாத் 138 ஓட்டங்களையும், சிறிகாந்த் 116 ஓட்டங்களையும் எடுத்தனர்,

நேற்றைய ஆட்ட முடிவின் போது அவுஸ்ரேலிய அணி தனது முதலாவது இன்னிங்சில் விக்கெட் எதனையும் இழக்காமல் 4 ஓட்டங்களை பெற்றிருந்தது. (து)

### வீடுகள் அமைப்பதற்கு
## 624 குடும்பங்களுக்கு ரூபா 60 லட்சம் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரத்துக்கு நகர வீடமைப்பு உப திட்டத்தின்கீழ் அறுபதுலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுல் வழங்கப்பட்டுள்ள இப்பணம் அறுநூற்று இருபத்துநான்கு குடும்பங்கள் வீடுகளைக்கட்டுவதற்காக வழங்கப்படும்.

இதேபோன்று பருத்தித்துறை வல்வெட்டித்துறை, சாவகச்சேரி ஆகிய நகர மக்களுக்கும் வீடுகட்டுவதற்காக இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோர் நகரத்துக்கும் பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வோர் நகரத்தையும் சேர்ந்த நூற்றுநான்கு குடும்பங்களுக்கு இக்கடன் வழங்கப்படும். [ஐ]

## ஊர்காவல் படையினரின் அட்டகாசத்துக்கு முற்றுப்புள்ளி

(திருகோணமலை)

ஊர்காவல் படையினரின் அட்டகாசங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

திருமலையில் தேசியபாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் நடைபெற்ற உயரதிகாரிகளைக் கொண்ட மகாநடொன்றில் ஊர்காவல்படையினர் இதுவரை காலமும் செயல்பட்டு வந்த முறைகுறித்து விரிவாக ஆராயப்பட்டது:

மேற்கொண்டு ஊர்காவல்ப் படைக்கு ஆட்களைச் சேர்க்பொழுது ஒழுக்கம், தராதரம் ஆகியன பற்றி கவனத்துக்கெடுத்துக் கொள்ளுவதுடன், நியமனம் பெறுபவர்களுக்கு ஆயுதம் வழங்குவதிலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

ஊர்காவல் படையில் தமிழர்கள் இடம்பெறுவஇ குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. [இ-மா]

### விபத்தில் இளம்பெண்காயம்

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்ஸிலிருந்து தவறிவிழுந்த இளம்பெண்ணொருவர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை மேற்படி மினிபஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் குறுக்கேவந்த சைக்கிளை விபத்தினின்றும் காப்பாற்றும் நோக்குடன் திடீரென 'பிறேக்' போட்ட சமயம் முன் ஆசனத்திலிருந்த இப்பெண் தவறிவிழுந்ததாக கூறப்படுகிறது, யாழ். மார்ட்டின் வீதியைச்சேர்ந்த அல்பேட் தர்சினி என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். (ச)

### வேதாரணியம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைஇயக்கங்களைச் சேர்ந்த 21 பேரையும் பொது மக்களில் 28 பேரையும் தமிழகப் பொலிசார் கைதுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-மா]

### உணவு முத்திரை 15 வரை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

1985 டிசம்பர் மாதத்திற்குரிய உணவு முத்திரையை இம் மாதம் 15ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என்று சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க)

### செவனதிட்டத்தின் கீழ் 100 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வறிய மக்கள் வீடு கட்டுவதற்காக நூறுலட்சம் ரூபா 'செவன' திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பத்து தேர்தல்தொகுதிக்கும் ஒவ்வொர் தொகுதிக்கு 10லட்சம் ரூபாவீதம் இப்பணம்ஒதுக்கப்பட்டுள்ளது

மிகவும் வறிய மக்களுக்கே இப்பணம் வழங்கப்படும் என்றும் இது பிரதமரின் விசேட திட்டங்களில் ஒன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஐ[

**நியூவிக்ரேஸ்**
புதிய வீடியோ பட வெளியீடுகள்
1. சிந்து பைரவி (பிரமிட்)
2. அவன்தான் மனிதன் (பிரமிட்)
3. பூமாலை V. G. P.
**நியூ விக்ரேஸ்**
எலெக்ரோனிக்கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532. [CR/A 25]

**வீடியோ பிரசாத்தின் இன்றைய வெளியீடு**
விஜயகாந்த், விஜி நடித்த
1. "ஈட்டி" (பிரமிட்)
சிவாஜி, ஜெயலலிதா நடித்த
2. அவன்தான் மனிதன் (பிரமிட்)
ரகுவரன் அர்ச்சனு நடித்த
3. எங்கிருந்தாலும் வாழ்க [தரமான பிரதி]
எஸ். பி. பாலசுப்பிரமணியம், கங்கைஅமரன் இணைந்து வழங்கும்
4. இன்னிசைக் கச்சேரி (பிரமிட்)
**வீடியோ பிரசாத்**
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# இப்படியும் நடக்கிறது

அது ஒரு கன்னி ஆடு. அண்மையில் முதல் குட்டியை ஈன்றது.

தாய் ஆட்டுக்கு நான்கு பாற் காம்புகள்! குட்டிக்கு மூன்று பாற் காம்புகள்! தாயின் அரவணைப்பில் அந்தக் குட்டி ஆடு, நான்கு பால் சுரப்பிகளிலும் பாலை சுவைத்து வயிற்றை நிரப்புகிறது.

வசாவிளான் தோலகட்டியைச் சேர்ந்த இ. சந்தியாப்பிள்ளையின் வீட்டிலிருக்கும் இந்த அதிசய ஆட்டையும் குட்டியையும் பெருந்திரளான மக்கள் பார்த்து, ரசித்து மகிழ்கின்றனர்.

'ஊடுருவி'


## சினிமா ரசிகர்களுக்கு முக்கிய அறிவித்தல்

தியேட்டர் அமைப்பிலான மொடேர்ண் மினி சினிமா புது வருட அன்பளிப்பாக 02-01-1986 தொடக்கம் ஒவ்வொரு காட்சி முடிவிலும் அழகிய படத்துடன்,

தனித்தனியாக 12 மாதங்கள் அடங்கிய

**கலண்டர் இனமாக வழங்கப்படும்.**

சொற்ப தினங்களுக்கு மட்டுமே. குடும்பத்துடன் பார்த்து ரசிப்பதற்கென்றே அமைக்கப்பட்டது.

**மொடேர்ண் மினி சினிமா**

கே. கே. எஸ். வீதி - ஸ்ரீலங்கா அச்சக லேன், யாழ்ப்பாணம்.

## விக்னா டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

10-வது வருட சேவை மீண்டும்

O/L Day Classes 8-30 — 1-30
Evening Classes 2-15 — 4-30
SAT. SUN 8-30—1-30
புதிய பிரிவு: 6-1-86

5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் புதிய வகுப்புக்கள் 6-1-86 [2-15—4-30]

முக்கிய குறிப்பு:

★ சிறந்த பெறுபேற்றுடன் பரீட்சையில் சித்திபெற எமது நிறுவனம் நிச்சயம் கைகொடுக்கும். கடந்தகால பரீட்சை முடிவுகள் இதற்கு சான்றாகும்.

★ பலரின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வருடம் 5-ம் வகுப்பு ஆரம்பமாகின்றது.

## மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு

**JANUARY 8-ந் திகதி**

எமது பிரதிநிதி இங்கிருந்து அழைத்துச்செல்வார்.

மற்றும்

**பாஸ்போட், பொண்ட், விசா**

என்பவற்றுக்கும்

யாழ்ப்பாணத்தில் பணத்தைக் கொடுத்து கொழும்பில் பெறுவதற்கும், கொழும்பில பணத்தைக் கொடுத்து யாழ்ப்பாணத்தில் பெறுவதற்கும் வசதி செய்து கொடுக்கப்படும்.

**லிப்ரூஸ் ரவல்ஸ்**

R. G. BUILDINGS,
70, Stanley Road,
JAFFNA.

No 60, Sea Beach Road,
Pettah,
Tel. No. 29148

மற்றும் இத்தாலி, பிரான்ஸ் போவதற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.


## 'செற்றப்' சுற்றுப்போட்டி

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழகம் இம்மாத நடுப்பகுதியில் கரபந்தாட்ட மின்னொளி 'செற்றப்') சுற்றுப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது பங்குபற்றவிரும்பும் கழகங்கள் இம்மாதம் 13ந் திகதிக்கு முன்பாக போட்டி பற்றிய விபரங்களுக்கு செயலாளருடன் தொடர்புகொள்ளலாம். (ப)

## இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி- 20[1986-1-4]
கிழமை- சனி
திதி- அட்டமி காலை 9.38ன் மேல் நவமி
நக்ஷத்திரம்- சித்திரை பி.இரவு வரை

மேடம்: வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள் ஏற்படும் பந்துக்களின் கொண்டாட்டங்களும் பாவையர்கள்களிப்பும் உண்டு. புகழும் குவிந்திடும்.

இடபம்: மிகவும் வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும் சகோதர வழியாலும் சஞ்சலம் ஏற்படும்.

மிதுனம். இறை வழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

கடகம்: தொழிலில் சிறப்பிற்கு இடமுண்டு. புதிய கண்டுபிடிப்புக்களும் இடம் பெறும். பொறியியலாளர்களுக்குச் சிறப்பான நாள்.

சிங்கம்: வாழ்க்கைத் தரத்தையுயர்த்துவதற்குப் பல வழிகளிலும் முயற்கி செய்வீர்கள். புதிய தொழிற்துறை ஒன்றில் வாய்ப்புக் கிடைக்கும். முன்னேற்றத்திற்கும் இடமுண்டு.

கன்னி: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும், உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

துலாம்: தேனுக இனித்தது வேம்பாக கசக்கும். மனதில் போராட்டம் ஏற்படும் அதிக சிந்தனைக்கு இடமளியாது அமைதியுடன் இருக்கவும்.

விருச்சிகம்: இருக்கும் இடத்தில் ஆதரவுபெருகும். பேச்சில்பெருமைக்கும் இடமுண்டு எழுத்தாளர்களுக்குச் சிறப்பானதினம்.

தனுசு: அன்னியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசரமுடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். மனதிலும் நிம்மதி குறையும்.

மகரம்: வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்புக் கிடைக்கும். தாய்வழிக் தனவரவிற்கும் இடமுண்டு. கல்விவித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

கும்பம்: இல்லத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பும் ஏற்படும். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும். மகிழ்ச்சிகரமான தினம்.

மீனம்: பணம் பலவழிகளிலும் செலாகும். அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும். கவனம்வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

பிரபல இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தாரின் தயாரிப்புகளை யாழ். நகரில் சென்று ஓடர் சேகரிப்பதற்கும், வானில் சென்று விற்பனை செய்வதற்கும் நன்கு அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

அடிப்படைச் சம்பளத்துடன் கொமிஷனும் வழங்கப்படும். (மாதாந்தம் ரூபா 3000/-க்குக் குறையாது வருமானம் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.)

விரும்பின் நேரில் வரவும்:

**றேயல் இன்டஸ்ரீஸ்,**

பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. (A13)

## சமுத்திரா மல்ரி சேவிசஸ்

எமது நிறுவனத்தால் விற்பனை செய்யப்படுவதற்குரிய காணிகள் பின்வருமாறு:

1. நீர்வேலியில் வீடு கட்டுவதற்குகந்த 5 பரப்புக் காணி.
2. மானிப்பாயில் வீட்டு அத்திவாரம் இடப்பட்ட 5½ பரப்புக் காணி.
3. ராஜவீதி கல்வியன்காட்டில் 2½ பரப்பு வெறுங் காணி.
4. இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3½ பரப்புக் காணி.
5. தாவடியில் சகல வசதிகளுடனும் 3 பரப்புக் காணி.

மேலும் காணிகளை வாங்கவோ / விற்கவோ விரும்புவோர் நேரடியாகவோ கடிதமூலமாகவோ எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு முகவரி:

**சமுத்திரா மல்ரி சேவிசஸ்**

தலைமை அலுவலகம்:
303, பலாலி றேட்,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

கிளை நிறுவனம்:
முருகமூர்த்தி லேன்,
நெல்லியடி,
கரவெட்டி.

A 15

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### காணி ஆணையாளர் திணைக்களம் கச்சேரி, முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் கீழ்க்காணும் வேலைகளுக்காக முத்திரை இடப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் 22-01-1986 காலை 12-00 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

திணைக்களங்களில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள், கிராமோதய சபைகள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்.

இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்களை 21-01-1986 பிற்பகல் 2-00 மணிவரை முல்லைத்தீவுக் கச்சேரியின் காணிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்கள், தனிப்பட்டவராயின் மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 500/-ம், கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 25/-ம் செலுத்தவேண்டும்.

கேள்விப்பத்திரங்களை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் குறிக்கப்படல் வேண்டும்.

22-01-1986-ம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் ஒப்பந்தகாரர்கள் அல்லது அவர்கள் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

### வேலைகள் விபரம்

1. கொத்தியாகும்பம் பொதுக்கிணறு அமைத்தல்.
2. கொத்தியாகும்பம் கிராம அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வீதியைப் புனரமைத்தல்.
3. அம்மிவைத்தகுளம் பொதுக்கிணறு அமைத்தல்.
4. அம்மிவைத்தகுளம் புகுமுகப்பாதை அமைத்தல்.
5. அம்மிவைத்தகுளம் உட்பாதை அமைத்தல்.
6. தேவிபுரம் பாதைகள் புனரமைத்தல்.

A. சிவசுவாமி
உதவி அரசாங்க அதிபர்
(காணி பரிபாலனம்),
முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்காக.

கச்சேரி, முல்லைத்தீவு,
01-01-1986. (A16)

## பொங்கல் தினம் முதல் புத்தாண்டு வரை

# வடபகுதியில் பிரார்த்தனை அனுஷ்டிக்கக் கோரிக்கை

### பருத்தித்துறை பிரஜைகள் குழு அறிக்கை

[யாழ்ப்பாணம்]

தைத்திருநாள் 14ம் திகதி முதல் சித்திரைப் புத்தாண்டுத் தினமான ஏப்ரல் 14ம் திகதிவரையுள்ள காலத்தை அமைதிப் பிரார்த்தனைக் காலமாகக் கணித்து தத்தமது மதக் கோட்பாடுகளுக்கமைய ஆலயங்கள், பள்ளிவாசல்கள் முதலியவற்றில் விசேட பூசைகளிலும் ஆராதனை, பஜனை, பிரார்த்தனைகளில் ஈடுபடும்படி சகல மக்களையும் பருத்தித்துறை பிரஜைகள்குழுபணிவுடன் கேட்டுக் கொண்டுள்ளது. பொங்கல் உட்பட சகல பெருநாட்களையும் எதுவிதப் படாடோபமுமின்றிக் கொண்டாடும்படியும் அக்குழு மேலும் கேட்டுள்ளது,

இது தொடர்பாக மேற்படி குழுவின் தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில், பட்டாசு கொழுத்துவதில்லையென்ற சபதமும் எடுத்துக் கொள்ளும்படியும் பட்டாசு வியாபாரத்தில் ஈடுபடவேண்டாமென்றும் கேட்டுள்ளார்.

ஏனைய பிரஜைகள் குழுக்களும் இந்த வேண்டுகோளை ஏற்று மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும்படியும் குறித்த காலத்தை வலிமையுள்ள அமைதிப் பிரார்த்தனைக் காலமாக்க உதவும்படியும் அவர் கேட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் புதிய ஜெப ஆலயம்

(கிளிநொச்சி)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி ஜெப ஆலய பிரதிஷ்டை ஆராதனை விழா பரந்தன் ஜெப ஆலய நிர்வாகி வண. போதகர் எஸ் சந்தானம்பிள்ளை தலைமையில் நடந்தேறியது.

மிகவும் எளிமையாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்ற இவ் விழாவில் போதகர்கள் எம். என். குணச்செல்வம், ஜே. கே. பிலிப், வண. பிதா. ஐசக் செல்வாத்தினம் அடிகளார் முதலானோர் ஆசிச் செய்திகளை வழங்கினார்கள்.

கிளிநொச்சி இ. போ. ச டிப்போ அண்மையில் பிரஸ்தாப ஆலயம் அமைந்துள்ளது.

## "பிறருக்கும் உதாரணமாகத் திகழ்ந்த உத்தியோகத்தர்"

[சாவகச்சேரி]

'ஒருவருக்கு விழா எடுத்து அவரைக் கௌரவிக்கிறோமென்றால் அவருடைய சேவையினால் பயனடைந்துள்ளோம். என்றே கூறவேண்டும். இந்த வகையில் பல மருடங்களாக கைதடி—நாவற்குழி, மறவன் புலோ பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. ச. குணரத்தினத்தின் சேவையால் நாம் பெரும் பயனடைந்துள்ளோம்.'

இவ்வாறு கைதடி-நாவற்குழி-மறவன்புலோ பகுதியில் பொது சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி யாழ். சுகாதாரப்பகுதி மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. ச. குணரத்தினத்திற்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவிலே தலைமை வகித்துப் பேசிய டாக்டர் கே. நடராஜா குறிப்பிட்டார்.

"திரு. குணரத்தினம் கடமை உணர்வும் பொறுப்புணர்வும் கொண்டவர். அவருடைய இந்த நல்ல அம்சங்களை மற்றவர்களும் பின்பற்றி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. வைத்தீஸ்வரன். சரசாலைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. பொ. சிவப்பிரகாசம், நாவற்குழி, கைதடி வடக்கு குடும்பநல ஊழியர்களும் திரு. குணரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

"தினமும் பயனுள்ள சேவைகள் செய்யவேண்டும். அப்பொழுதான் எமது கடமை முழுமை பெறும்" என்று சுகாதாரப் பரிசோருகர் திரு. ச. குணரத்தினம் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு பதிலுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

## "'யாழ்தேவி' சேவையை கோட்டைவரை நீடிக்குக!"

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் 'யாழ் தேவி' மருதானையோடு தனது சேவையை நிறுத்திக் கொள்வதால் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். பகலிலேயே பிக் பொக்கட்டிற்கு பெயர் பெற்ற அப் பிராந்தியத்தில் இரவு நேரப் பிரயாணிகளிடம் மிகவும் கிரமமாக பிக் பொக்கட் அடிக்கப்படுகின்றன. பணத்தையும் பெறுமதிமிக்க தஸ்தாவேஜுகளையும் இழந்து தவிக்கும் தமிழ் பேசும் வாலிபர்கள் பலர் தாம் போகவேண்டிய பஸ் தரிப்பிடங்களைத்தேடி அலையும் போதும் பயமுறுத்தியும் பணம் கறக்கப்படுகின்றது எனவே யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வேதனையை மேலும் பெருக்காமல் 'யாழ் தேவி'யின் சேவையை கொழும்பு கோட்டை வரை விஸ்தரிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

போக்கு வரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மதுவை தமிழர் கலாசார சங்கத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு மகஜர் மூலம் கோரியுள்ளார்.

## உற்சாகக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்

[புலோலி]

"நுகர்வோர், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சிறந்த நன்மைகளைப் பெற்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய முறையில் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபைகள் இயங்க வேண்டும்."

இவ்வாறு, யாழ் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் புலோலி ப. நோ. கூ சங்கத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. எஸ். தணிகாசலம் தலைமை வகித்தார். உதவி ஆணையாளர் திரு. சண்முகலிங்கம் மேலும் உரையாற்றுகையில்,

'நுகர்வோர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கி மேலதிக விற்பனைகளைச் செய்யும் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உற்சாகக்கொடுப்பனவுகள் வழங்கப் படவேண்டும். சங்க ஊழியர்களின் ஒத்துழைப்பும் இயக்குநர்சபைஉறுப்பினர்களின்சிறந்தசெயற்பாடுகளுமேசங்கத்தைச் சிறப்பாக இயங்க வழி வகுத்திருக்கிறது' என்றார்.

தலைவர் திரு. தணிகாசலம் தலைமையுரையில், அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சகல படிகளும் இப் பலநோக்குக் கூட்டுறவச் சங்க ஊழியர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் இறுதியாக வழங்கபப்பட்ட படியைச் சங்கம் நட்டத்தில் இயங்குவதனால் நிறுத்துவது பற்றி ஆலோசிக்க வேண்டியுள்ளது எமது இச் சங்கத்தை இலாபகரமான சங்கமாக இயங்கச் செய்வதோடு நுகர்வோருக்குச் சிறந்த சேவைகளை வழங்க வழி வகுப்பதற்கும் ஊழியர்கள் நடவடிக்கைகளையும், ஒத்தாசைகளையும் வழங்கவேண்டும் என்றார்

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எம். கந்தையா புலோலி ப. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் திரு. சோ. அருணகிரி உட்பட இன்னும்பலர் உரையாற்றினர். [ப]

## பிரஜைகள் குழு அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்திலுள்ள அகதிகளின் நலன் கருதி நாரந்தனை வடக்கு பிரஜைகள் குழு 1000 ரூபாவை கழகத்தலைவர் டாக்டர். ப. சசிதரனிடம் அன்பளிப்புச் செய்துள்ளதோடு அகதிகளின் துயர் துடைப்பில் கழகத்தின் செயற்பாடுகளையும் பாராட்டியுள்ளது. (ச)

## முள்ளியவளையின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தார். கிராமோதய சபையாலும் முள்ளியவளை சமூகஆய்வ மன்றத்தாலும் வழங்கப்பட்ட பாராட்டிதழ்களை முன்னாள் அதிபர் திரு. ச. முத்தையா, சங்கீத பூஷணம் திரு எஸ். ஜெயவீரசிங்கம் ஆகியோர் இசைத்தளித்தனர் செல்வன் த. அருந்தாதரன் பாமாலையாலும் கவிதை நடையாலும் பாராட்டுரை வழங்கினார். செல்வி. செ. இராச்சுலோசனா பாராட்டு மாலை வழங்கினார்.

முல்லை மாவட்டத்தின் கல்விமான்களும் கலைஞர்களும் பெருந் தொகையினராகக் கலந்து கொண்ட இவ் விழா கிராம அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. க. குலசிங்கத்தின் நன்றியுரையுடன் இனிது நிறைவுற்றது. (ச)

## ஈழத்தில் பூத்த...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். அத்துடன் பெண்களுக்கும் சமய அறிவூட்டி சைவசமயப்பற்றையும் ஏற்படுத்தி வருகின்றார்.

மலேஷிய அருள் நெறித் திருக்கூட்டத் தலைவர் திரு. இ வே. கந்தையா வாழ்த்துரை வழங்குகையில்; அறிவும் பண்பும், சீலங்களும் கடமையுணர்ச்சியும் தன்னுயிர்போல் மன்னுயிரையும் மதித்து சேவைசெய்யும் மனப்பாங்கும் கொண்ட செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழும் இந்தக் காலத்தில் நாம் வாழ கொடுத்து வைத்திருக்கவேண்டும்" என்றார்.

### சோதனைக்காலம்

மலேயா பல்கலைக்கழக தத்துவத்துறைத்தலைவர் திருமதி தேவபூபதி நடராசா அவர்கள் பேசுகையில்;

ஈழத்திலே வாழும் தமிழர்களுக்கு, சைவர்களுக்கு இது சோதனைக்காலம், வேதனைக் காலம். இந்த நேரத்திலே வெளியிலே நடக்கும் வன்செல்கள் அதனால் உண்டாகும் துன்பங்கள் எல்லாம் ஒரு இருளாக, புறஇருளாக சூழ்ந்திருக்கும் நேரத்தில் அந்தப் புறஇருள் மனத்தைக்கலக்கித் துன்பத்தைக் கொடுத்து உள்ளத்திலேயும் அந்த இருள் பரவாமலிருப்பதற்கும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படவேண்டியது. இறை நம்பிக்கையும், இறை வழிபாட்டையும் எந்தப் புறச்சூழல்கள் ஏற்பட்ட பொழுதும் அந்தச்சூழலிலே வளர்ந்துவரும்அந்தப்பெருமை நம்முடைய அம்மையாருக்கு உரியது.

இன்று ஈழத்திலே தோன்றியுள்ள நெருக்கடி நிலையிலும், நெருக்கடிக்காரர்களோடு போராடாமல் அதேவேளையில் அந்த நெருக்கடிகளுக்கு இடம் கொடுக்காமல் அங்குள்ள மக்களிடையே தமிழ் உணர்வையும் சமய உணர்வையும் வளர்த்து அங்கே சைவம் நிலைத்துநிற்பதற்கு இறைவன் அம்மையாரை ஒரு துறவியாக ஈழத்திற்கு அனுப்பியுள்ளார்" என்றார்.

டாக்டர் சாமிவேல், சைவ சித்தாந்தப் பேரறிஞர் வீ.கே. பாலசுந்தரம் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணிம் வாழ்த்துப்பா ஒன்றை வாசித்து வழங்கினார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பதிலுரையாற்றுகையில்; "எமது வாழ்க்கையிலே வாழ்த்துக்களைத்தேடி நாங்கள் பெறவேண்டும். புகழ்ச்சியைத் தேடிப்போகக்கூடாது. புகழ்ச்சி எங்களைத்தேடி வரட்டும், வராவிட்டால் விடட்டும். ஆனால் வாழ்த்துக்களை நாங்கள் தேடிப்பெறவேண்டும். இந்த வாழ்த்துக்களை நான் மனமார ஏற்றுக்கொள்கிறேன். இந்த வாழ்த்துக்கள் எம்மை வாழவைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்றார்.

## 'நிதி அன்பளிப்பு'

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக நடாத்திய கலை விழாவில் வசூலிக்கப்பட்ட நிதி நல்லூர் சங்கிலியன் அகதி முகாமுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## படிவங்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் பாஸ்போட் விண்ணப்பப்படிவம் பெறச் செல்பவர்கள் அங்கு படிவங்கள் இல்லாமையால் பெரும் அவதியுறுகின்றனர்.

இதேவேளை கச்சேரியில் ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த அப்படிவங்கள் வெளியில் பத்து ரூபாவாக விற்பனை செய்யப்படுவதால் கூடிய விலை கொடுத்து படிவங்களை வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. (ச)

## மகா கும்பாபிஷேகம்

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு மத்தியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் 22-ம் திகதி புதன்கிழமை காலை பிரதிஷ்டா பூஷணம் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். கோவிற் குருக்கள் சுவாமிநாத சோமேஸ்வர சர்மா மேற்படி நிகழ்ச்சிகளை நடாத்தி வைப்பார்.

## வவனியாவில் நத்தார் கிரிக்கட் போட்டி

[வவனியா]

வவனியா இறம்பைச் குளத்தில் நடைபெற்ற நத்தார் தின கிரிக்கட் விளையாட்டுப் போட்டியில் யூனிவேசல் விளையாட்டுக் கழகம் சாம்பியனுக்கானகேடயத்தையும்,கோவில் குளம் றெக்கட் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டன.

இப்போட்டியில் நான்கு கழகங்கள் பங்குபற்றின. வவனியா திட்டப் பணிப்பாளர் திரு. ரி. இலங்காநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

இறம்பைக்குளம்யூனிவேசல் விளையாட்டுக்கழகம்இப்போட்டியினை ஏற்பாடுசெய்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை தரம்உயர்வு

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை இளைய தம்பி தமிழ் வித்தியாலயத்தில் இவ்வாண்டுமுதல் ஏழாம் ஆண்டு வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வித்தியாலய அபிவிருத்திச் சபையின் வேண்டுதலாலும், நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஆகியோரின் சிபார்சின் பேரிலேயே கல்வி அமைச்சு இப்பாடசாலையின் தரத்தை உயர்த்தி புதிய ஆறும் வகுப்பினை நடத்த அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## புதிதாக 13 அபிவிருத்தி அதிகாரிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் பெருமுயற்சியால் யாழ் உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் கொழும்பு உள்ளூராட்சித்திணைக்கள ஆணையாளருடன் தொடர்புகொண்டு கையளிக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் யாழ் மாவட்டத்தின் 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் 13 சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான புதிய நியமனங்கள் இம்மாதம் 23ம்திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது, இதுகுறித்து யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ பொதுச் செயலாளர் திரு எஸ்.எஸ் வரதராசா நன்றி தெரிவித்து கொழும்பு உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பியுள்ளார். (ச)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## வைத்திய அதிகாரி வீட்டில் ரூபா 50,000 கொள்ளை!

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியின் வீட்டில் ஆயுதந்தாங்கிய நபர்களால் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

நீலநிற உடைதரித்த 5 நபர்கள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் வைத்திய அதிகாரியின் வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கு 2 பெண்டாக்டர்களும் ஒருதாதியும், பல்டாக்டர் ஒருவரின் மனைவியும், பாடசாலை மாணவியும் இருந்ததாகவும் கூறப்படுகிறது. துப்பாக்கி நபர்கள் பெண்களைப் பயமுறுத்தி அவர்கள் அணிந்திருந்த நகைகளையும், அங்கு வைக்கப்பட்டிருந்த 15 ஆயிரம் ரூபாரொக்கப்பணத்தையும் கொள்ளை அடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். இதுசம்பந்தமாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. [மா]

## மரண அறிவித்தல்
### திரு. தம்பு விசுவநாதன்

மாகியப்பிட்டியைச் சேர்ந்த தம்பு விசுவநாதன் (கட்டட ஒப்பந்தக்காரர்) காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பு நாமுத்து தம்பதிகளின் ஏக புதல்வனும். ஆச்சிப்பிள்ளையின் அன்புக்கணவருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-01-86 சனிக்கிழமை (இன்று) காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொட்டுப்பனை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சபாரட்ணம்,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(C 31)

## மரண அறிவித்தல்
### திரு. இம்மானுவல் பஸ்நியாம்பிள்ளை
(Retired Chief Clerk, Internal Audit, Ceylon Electricity Board)

கரம்பொன்னைச் சேர்ந்த திரு இம்மானுவல் பஸ்தியாம்பிள்ளை 2-1-86ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. லோறன்ஸ் செல்லையா, திருமதி எலிசபெத் செல்லையா ஆகியோரின் மூத்தபுதல்வரும், செல்வராணியின் அன்புக் கணவரும். நளினி, சாந்தகுமார், சாந்தினி, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பெனி ஜெயராஜன், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனும், சஞ்சீவின் அன்புப் பாட்டனும்; ஹெலன் அத்தனஸ், பொன்மணி அல்பேட், பிரான்சிஸ் பஸ்தியாம்பிள்ளை, அஞ்சலோ, ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஹரியட் பிரான்சிஸ்பிள்ளை; சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற சேவியர் செல்வநாயகம்; புஷ்பராணி சிங்கராயர் பீற்றர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை 6-01-86 காலை 8 மணிக்குக் கரம்பொன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

(C 36)

## மரண அறிவித்தல்
### A. S. அருளானந்தம்
(சமாதான நீதவான், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)



A. S. அருளானந்தம் 31-12-85 அன்று காலமாகிவிட்டார் 01-01-86ல் அறிவித்தபடி அன்னாரது பூதவுடல் 04-01-86 இன்று சனிக்கிழமை 3-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத் துச்செல்லப்படும். உற்றூர், உறவினர், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி கத்தறீன் அருளானந்தம்,
பிள்ளைகள்.

St. Jude,
79, Cathidral Road, Jaffna,

(C-47)

## விபத்தில் சாரதி படுகாயம்

[யாழ்ப்பாணம்]

வேகமாகச் சென்றுகொண்டிருந்த 'ட்ராக்ரர்' ஒன்று மதிலின் மீது பாய்ந்ததில் 'ட்ராக்ரர்' சாரதி காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டுச் சந்தைக் கருகாமையில் நேற்றுமாலை இடம்பெற்ற இவ்விபத்தில் படுகாயமடைந்தவர் அரியாலையைச் சேர்ந்த சி. யோகராசா என்பவராவர். (ச)

## நோய் தாங்காமல் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நோயின் கொடுமை தாங்க முடியாத குடும்பப் பெண்ணொருவர் அலரிக்காய் உட்கொண்டுதன் உயிரை போக்கிக் கொண்டார்.

சுதுமலையைச் சேர்ந்த இராசாத்தியம்மா சபாரத்தினம் (55 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இப் பெண் ஆறு வருடங்களுக்கு முன் கருப்பையில் சத்திரசிகிச்சை செய்ததாகவும் அதைத் தொடர்ந்து கருப்பையில் வலி இருந்து வந்ததாகவும் நேற்று முன் தினம் வலியின் கொடுமை தாங்க முடியாத நிலையில் அலரிக்காயை உட்கொண்டு அறிவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு அங்கு உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

மரணவிசாரணை நடாத்திய யாழ்.மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் தற்கொலை மரணமெனத் தீர்ப்பளித்தார். (ச)

## இவர் யார்?

(வவனியா)

வவனியா - கண்டி வீதியில் சுமார் 40 வயதுள்ள இனந்தெரியாத ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பௌத்த விகாரைக்கு 200 யாருக்கப்பால் பற்றிக் சாரம் அணிந்திருந்த நிலையில் இச்சடலம் கிடந்தது.

வவனியா ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காக இச்சடலம் வைக்கப்பட்டுள்ளது. (மா)

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதி டாக்டர்களின் விசேட கருத்தரங்கொன்று இன்று சனிக்கிழமை பகல் 1-30 மணிக்கு வட இலங்கை ஹோமியோபதி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஹோமியோபதி வைத்தியத்துறை, டாக்டர்களின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்படும். ஹோமியோபதி டாக்டர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்கும்படி தலைவர் கேட்டுள்ளார். (ச)

ஃ ஃ ஃ

(வேலணை)

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களுக்கிடையிலான தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்கள் தங்கள் நியமனங்களை இன்று காலை தாக்கல் செய்வார்கள்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## பலாலியில் மேலும் குடிபெயரும் குடும்பங்கள்

[மாவிட்டபுரம்]

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் மேலும் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் முன்பு 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்து வயாவிளான் சாதனா பாடசாலையில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேலும் வயாவிளான் பகுதியில் விவசாயம் செய்துவந்த 25 குடும்பங்களும் மயிலிட்டி வடக்கில் 6 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இடம்பெயர்ந்ததால் அவர்கள் செய்த விவசாய பயிர்கள் நாசம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தரும்படியும், வேறு இடங்களில் காணிகள் வழங்கும்படியும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்
### திருமதி மயில்வாகனம் சின்னப்பிள்ளை

திருமதி மயில்வாகனம் சின்னப்பிள்ளை 03-01-1986ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. ஆ. மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இராசநாதன், சிவக்கொழுந்து, சிவகுரு (பொலிஸ்அலுவலகம் யாழ்ப்பாணம்), திருமதி செல்லப்பா சிவபாக்கியம், திருமதி தம்பிஐயா சிவஞானம், திருமதி திருச்செல்வம் சிவகாமன் (யாழ்/கன்னியர்மடம் மகாவித்தியாலம்) ஆகியோரின் அன்புத்தயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 'சிவபதி' ஊரெழு இல்லத்தில் இருந்து தை மாதம் 4ந் திகதி (4-1-1986) சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு ஊரெழு பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

ம. சிவகுரு,
ஊரெழு வடக்கு, சுன்னுகம்,

[A 49]

## மரண அறிவித்தல்
### ஜெயரத்தினம் ரேசம்மா

உரும்பராய்வாசியாகிய காலஞ்சென்ற ஜெயரத்தினத்தின் அன்பு மனைவி ரேசம்மா 3-1-86ல் காலமானார். இவர் ஜெயதேவன் (காணிப்பதிவாளர் காரியாலயம், யாழ்ப்பாணம்), ஜெயமணி, ஜெயருணி, ஜெயசோதி, ஜெயலக்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேசன், தர்மசேகரம், பரமானந்தம், விஸ்வநாதன், பாலாம்பிகை ஆகியோரின் அன்புமாமியாரும், பொன்னுத்துரை. குணராசா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-01-86 சனிக்கிழமை (இன்று காலை 9-00மணியளவில் இழங்காடு மயானத்தில் நடைபெறும்.

எஸ். பொன்னுத்துரை,
(Retired Govt Surveyor)

உரும்பராய்,
3-01-86.

(C 42)

## மரண அறிவித்தல்
### கந்தையா ஆறுமுகம்

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் (வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இருந்து ஒய்வுபெற்ற ஆசிரியர்) காலமானார். இவர் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக்கணவரும், சோமசுந்தரம் (பொறியியலாளர். ஓமான்), கலாநிதி சந்தையா (இத்தாலி), இரவீந்திரநாதன் (ஆசிரியர், பேசாலை), காலஞ்சென்ற விக்கினேஸ்வரி, கருணேஸ்வரி. ஆழ்வாப்பிள்ளை (உதவி விரிவுரையாளர் பொறியியல்பீடம் பேராதனை) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் நேற்று (3-01-86) வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் பருத்தித்துறையில் ஆத்தியடியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, சுப்பர்மடம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்.
ஆத்தியடி,
பருத்தித்துறை.

(C 24)

## மரண அறிவித்தல்
### திருமதி நாகரட்ணம் சபாரட்ணம்
(கல்வியங்காடு)

திருமதி நாகரட்ணம்- சபாரட்ணம் (கல்வியங்காடு) 2-1-86ல் காலமானார். இவர் நீர்கொழும்பு பிரபல வர்த்தகர் T.A சபாரத்தினம் அவர்களின் அன்புமனைவியும், திரு. செ. பாலசுப்பிரமணியம் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி மங்கையர்க்கரசி, திருச்செல்வம் (சவுதி), சச்சிதானந்தன், மகேந்திரன் (பிரான்ஸ்), திருமதி தில்லைநாயகி, செல்வி கௌரிநாயகி (சிங்கர் கம்பனி, கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், செ. யோகரத்தினம், லிங்கதேவி, கமலம், சூரியகாந்தன் (சவுதி) ஆகியோரின் அன்பு மாமியாரும், T,A. குணரத்தினம் (கொழும்பு சுலைமான் ஆஸ்பத்திரி) அவர்களின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 5-1-86 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் செங்குந்தா ஒழுங்கை, வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்,

(A 26) தகவல்! T. A. சபாரட்ணம்.